**குழு :** குச்சிக் குச்சி ராக்கம்மா
பொண்ணு வேணும் கூடசாலி
ராக்கம்மா பொண்ணு வேணும்
சாதி சனம் தூங்கயில சாமக்கோழி
கூவயில குச்சிக் குச்சி ராக்கம்மா
கூட சாலி ராக்கம்மா

**குழு :** ஹையா ஹையா
ஹைய்யா ஹையா ஹையா
ஹைஹைய்யா ஹையா ஹையா
ஹைய்யா ஹையா ஹையா

**ஆண் :** குச்சிக் குச்சி ராக்கம்மா
பொண்ணு வேணும் கூடசாலி
ராக்கம்மா பொண்ணு வேணும்
சாதி சனம் தூங்கயில சாமக்கோழி
கூவயில

**குழு :** குச்சிக் குச்சி ராக்கம்மா
கூடசாலி ராக்கம்மா

**பெண் :** குச்சிக் குச்சி ராக்கம்மா
வரமாட்டா நீ கொஞ்சிப்பேச
பொண்ணு ஒன்னு தரமாட்டா
சாதி சனம் தூங்கலையே
சாமக்கோழி கூவலையே
குச்சிக் குச்சி ராக்கம்மா
வரமாட்டா நீ கொஞ்சிப்பேச
பொண்ணு ஒன்னு தரமாட்டா

**குழு :** ..............................

**ஆண் :** காட்டு முயலுக்கு
பனி பிடிக்கும் கானக் குயிலுக்கு
வெயில் பிடிக்கும் ஆணி வேருக்கு

மண் பிடிக்கும் ஹே அப்பனுக்குப்
பெண் பிடிக்கும்

**பெண் :** அரசன் மகனுக்கு
வாள் பிடிக்கும் அழுத
குழந்தைக்குப் பால் பிடிக்கும்
புருஷன் ஜாமத்தில் கனைக்கயிலே
பொம்பளைக்கு கிளி பிடிக்கும்

**ஆண் :** அள்ளும் பகலுமே
நனைந்தாலும் ஆத்து மீனுக்கா
குளிரெடுக்கும் அள்ளி அள்ளி
நான் கொடுத்தாலும் ஆனந்தப்
பூவுக்கா பொன்மேனி வலிக்கும்

**ஆண் :** ஆஆ பொட்டப்புள்ள
பெத்துக் கொடு
**பெண் :** போதும் என்னை
விட்டு விடு

**ஆண் :** ஆ ஆ ஆ பொட்டப்புள்ள
பெத்துக் கொடு
**பெண் :** போதும் என்னை
விட்டு விடு

**ஆண் :** வெளிச்சம் எரியவிட்டு
வெக்கத்தை அணைத்துவிடு

**பெண் :** குச்சிக் குச்சி ராக்கம்மா
வரமாட்டா நீ கொஞ்சிப்பேச
பொண்ணு ஒன்னு தரமாட்டா
சாதி சனம் தூங்கலையே
சாமக்கோழி கூவலையே

**குழு :** குச்சிக் குச்சி ராக்கம்மா
வரமாட்டா நீ கொஞ்சிப்பேச

பொண்ணு ஒன்னு தரமாட்டா
சாதி சனம் தூங்கலையே
சாமக்கோழி கூவலையே

**குழு :** குச்சிக் குச்சி ராக்கம்மா
கூட சாலி ராக்கம்மா

**குழு :** ஹையா ஹையா ஹை
ஹையா ஹையா ஹையா ஹை
ஹையா ஹையா ஹை ஹையா
ஹையா ஹையா ஹை ஹையா
ஹையா ஹையா ஹையா ஹையா
ஹையா ஓய்ஓய் ஹையா
ஹையா ஹையா ஹை ஹையா
ஹையா ஹையா ஹையா ஹையா
ஹையா ஓய்ஓய் ஓ ஓ

**பெண் :** சிறகை நீங்கினால்
பறவையில்லை திரியை
நீங்கினால் தீபமில்லை
உன்னை நீங்கினால்
நானில்லை உனக்கிது
புரியவில்லை

**ஆண் :** உடலை நீங்கினால்
உயிருமில்லை ஒலியை
நீங்கினால் ஒளியுமில்லை
உன்னை நீங்கினால்
நானில்லை உனக்கிது
தெரியவில்லை

**பெண் :** பூமி சுற்றுவது
நின்றுவிட்டால் புவியில்
என்றுமே மாற்றமில்லை
புருஷன் சுற்றுவது நின்று
விட்டால் எந்நாளும்
பெண்வாழ்வில் ஏற்றங்கள்
இல்லை

**பெண் :** பொத்தி வைத்த
ஆச வந்து
**ஆண் :** நெத்தியில துடிக்குது

**பெண் :** பொத்தி வைத்த
ஆச வந்து
**ஆண் :** நெத்தியில துடிக்குது

**பெண் :** தொட்ட இடம்
பத்திக் கொள்ளும்
தூரத்தில் ஒதுங்கி நில்லு

**குழு :** குச்சிக் குச்சி ராக்கம்மா
கூட சாலி ராக்கம்மா

**குழு :** { குச்சிக் குச்சி ராக்கம்மா
வரமாட்டா நீ கொஞ்சிப்பேச
பொண்ணு ஒன்னு தரமாட்டா
சாதி சனம் தூங்கலையே
சாமக்கோழி கூவலையே } (2)
குச்சிக் குச்சி ராக்கம்மா